**க.பொ.த (சாதாரண தரம்)**

**பின்னூட்டல் செயற்பாட்டுப் பத்திரம்: 06 – அல் முஆமலாத்**

# இஸ்லாம்



**உள்ளடங்கும் தேர்ச்சிகள்:**

**தரம் 10: 10.6.1.1, 10.6.1.2, 10.6.1.3, 10.6.1.4 10.6.1.5 10.6.2.1**

**தரம் 11: 11.6.1, 11.6.2, 11.6.3, 11.6.4 11.6.5 11.6.6**

**சமயங்கள் மற்றும் விழுமியக் கல்விக் கிளை**

**கல்வி அமைச்சு**

## க.பொ.சாதாரண தரப் பரீட்சை – 2024
## மாதிரி வினாக்கள்
## தேர்ச்சி 06 : முஆமலாத்

1. இஸ்லாமியப் பொருளாதாரத்தின் இரு வகை அடிப்படைகளும் எவை?
…………………………………………………………………………
…………………………………………………………………………
2. முராபஹா என்பதன் விளக்கம் யாது?
…………………………………………………………………………
…………………………………………………………………………
3. வியாபாரத்தின் அடிப்படைகள் இரண்டு தருக?
…………………………………………………………………………
4. இஸ்லாமிய பொருளாதாரத்தின் சிறப்பம்சங்கள் நான்கு தருக?
…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………
5. வியாபாரப் பண்டமொன்று பெற்றிருக்க வேண்டிய பண்புகள் நான்கு தருக?
…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………
6. நான்கு நபிமார்களின் பெயர்களைக் குறிப்பிட்டு அவர்கள் ஒவ்வொருவரும் ஈடுபட்ட தொழிலையும் குறிப்பிடுக?
…………………………………………………………………………
…………………………………………………………………………
…………………………………………………………………………
7. உலகில் முதன்முதலாக கால் நடை வளர்ப்பில் ஈடுபட்டவரினதும் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டவரினதும் பெயர்களைக் குறிப்பிடுக?
…………………………………………………………………………
…………………………………………………………………………
8. உரிமை கோரப்படாத ஒரு நிலத்தை ஒருவர் பயன்படுத்தி அதை வளப்படுத்தினால் அந்நிலத்தின் உரிமை தொடர்பில் இஸ்லாமிய நிலைப்பாடு யாது?
…………………………………………………………………………
9. உழைக்காமல் தொடர்ந்தும் யாசகம் கேட்பவனது மறுமை நிலை பற்றி நபியவர்கள் கூறிய விடயம் யாது?
…………………………………………………………………………
…………………………………………………………………………
10. பொதுவாக அனைத்து நபிமார்களும் மேற்கொண்டதாக ஹதீஸ் குறிப்பிடும் தொழில் முயற்சி யாது?
…………………………………………………………………………

11. “உழைப்பு முஸ்லிமின் மீது கடமையான ஒன்றாகும்” இக்கூற்றைத் தர்க்க ரீதியாக விளக்குக

..............................................................................

.............................................................................

12. தவக்குல் என்பதன் உண்மையான செயல் வடிவம் யாது?

............................................................................

13. முழாரபா, முஷாரகா ஆகிய பதங்களின் கருத்து யாது?

..............................................................................

...............................................................................

...................................................................

14. வட்டிக்கும் வியாபாரத்திற்கும் இடையிலான வேறுபாடுகள் நான்கு தருக?

..............................................................................

...............................................................................

...................................................................

15. பொருளீட்டல் வணக்கமாக மாற வேண்டுமாயின் பேண வேண்டிய அம்சங்கள் யாவை?

..............................................................................

...............................................................................

............................................................................

16. கூட்டு வியாபாரத்தின் நன்மைகள் இரண்டு தருக?

..............................................................................

......................................................................

17. சிலர் உழைக்காமல் முயற்சியின்றி இருப்பதற்கான காரணம் என இமாம் மாவர்தி எவற்றைக் குறிப்பிட்டுள்ளார்?

..............................................................................

..........................................................................

18. விவசாயத்தின் முக்கியத்துவத்தைக் காட்டும் நபி மொழி ஒன்றை எழுதுங்கள்

..............................................................................

..........................................................................

19. வியாபாரக் கொடுக்கல் வாங்களின் போது தடுக்கப்பட்ட அம்சங்கள் ஐந்தைக் குறிப்பிடுக

..............................................................................

.........................................................................

20. வாங்குவோரும் விற்போரும் இஸ்லாமிய அடிப்படைகளைப் பேணும் போது கிடைக்கும் நன்மைகள் நான்கு தருக?

..............................................................................

..............................................................................

.......................................................................

21. கர்ழ், ஸலம் ஆகிய பதங்களின் கருத்து யாது?

..............................................................................

..........................................................................

22. மறுமையில் நபிமார்களுடனும் ஷுஹதாக்களுடனும் இருக்கும் பாக்கியத்தைப் பெறும் வியாபாரியின் விசேட பண்பு யாது?

…………………………………………………………………………

………………………………………………………………………

23. கைத் தொழிலை வழியுறுத்தும் இஸ்லாமிய போதனை ஒன்றைக் குறிப்பிடுக?

…………………………………………………………………………

………………………………………………………………………

24. தமது செல்வத்தைக் கொண்டு அதிகமதிகம் இஸ்லாத்திற்காக சேவை செய்த மூன்று ஸஹாபாக்களைக் குறிப்பிடுக

…………………………………………………………………………

…………………………………………………………………………

25. விவசாய உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்காக மேற்கொள்ளப்படும் நுட்ப முறைகளை நபியவர்கள் அனுமதித்தார்கள் என்பதற்கு ஓர் ஆதாரத்தைக் குறிப்பிடுக

…………………………………………………………………………

…………………………………………………………………………..

26. தச்சுத் தொழிலில் ஈடுபட்ட நபி யார்?

……………………………………………………………..

27. இரும்பைப் பயன்படுத்தி பெரும் சுவர்களையும் அணைகளையும் நிர்மாணித்ததாக அல்குர்ஆன் குறிப்பிடும் மன்னன் யார்?

…………………………………………………………………………

28. சிறந்த தொழில் எது என நபியவர்களிடம் கேட்கப்பட்ட போது அவர்கள் எவ்வாறு பதில் கூறினார்கள்?

…………………………………………………………………………

…………………………………………………………………………

29. நபியவர்களின் மனைவியர்களுள் வலைபின்னி உழைப்பு நடத்தியவர் என்று பாராட்டப்படுபவர் யார்?

…………………………………………………………………………

………………………………………………………………………

30. வியாபாரம் செய்பவர்களிடம் அதுபற்றிய சட்ட விளக்கம் இருக்க வேண்டும் என்று உமர் (ரழி) அவர்கள் வலியுறுத்தக் காரணம் என்ன?

…………………………………………………………………………

…………………………………………………………………………

…………………………………………………………………………..

31. வியாபாரக் கொடுக்கல் வாங்களில் தடுக்கப்பட்ட விடயங்களுள் மூன்றைக் குறிப்பிடுக

…………………………………………………………………………

………………………………………………………………………

32. சேவைத் தொழிலாளியின் கடமையினையும் உரிமையினையும் குறிப்பிடுக

…………………………………………………………………………

…………………………………………………………………………

33. அல்லாஹ் வியாபாரத்தை ஆகுமாக்கியிருக்கின்றான். எனினும் நபியவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் ஏன் வியாபாரிகளை பாவிகள் என்றார்கள்?

…………………………………………………………………………

…………………………………………………………………………

34. பொருளீட்டலின் போது ஒரு முஸ்லிம் பேணவேண்டிய அம்சங்கள் மூன்றினை குறிப்பிடுக

.........................................................................................................

...............................................................................................

35. பிள்ளைகள் பெற்றோருக்கு செய்யவேண்டிய கடமைகள் இரண்டினைக் குறிப்பிடுக

.........................................................................................................

.............................................................................

36. முன்மாதிரி இஸ்லாமியக் குடும்பத்தின் பண்புகள் நான்கு தருக.

.........................................................................................................

.............................................................................

37. முன்மாதிரி முஸ்லிம் குடும்பத்தின் பெற்றோரது கடமைகள் ஐந்து தருக.

.........................................................................................................

.............................................................................

38. தற்காலிக மஹ்ரமிகளுக்கு இரண்டு உதாரணங்கள் தருக

.........................................................................................................

.............................................................................

39. முறையான தலாக்குக்குரிய நிபந்தனைகளுள் இரண்டைத் தருக

.........................................................................................................

.............................................................................

40. இத்தா இருக்கும் ஒரு பெண் தவிர்ந்து கொள்ள வேண்டிய விடயங்கள் இரண்டு தருக

.........................................................................................................

....................................................................................

41. மஹ்ரம் என்றால் என்ன?

................................................................................

42. திருமண உறவு மூலம் ஏற்படும் மஹ்ரமீக்கள் இரண்டு தருக

................................................................................

43. அஜ்னபி – மஹ்ரமி உறவின் போது பேண வேண்டிய வரையறைகளைக் குறிப்பிடுக?

.........................................................................................................

......................... ..................................................

44. நிகாஹ் எனும் சொல் இஸ்லாமியப் பரிபாஷையில் எதனைக் குறிப்பிடுகின்றது?

.........................................................................................................

......................................................................................

45. இஸ்லாத்தின் பார்வையில் திருமணத்தின் நோக்கங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

..........................................................................................
..........................................................................................
..........................................................................................

46. குடும்ப உறவு தொடர்பான அல்குர்ஆன் வசனம் ஒன்றையும், ஹதீஸ் ஒன்றையும் தருக.

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

47. லிஹார் ஏற்படுவதற்கான சந்தர்ப்பத்தைக் குறிப்பிடுக.

..........................................................................................
..........................................................................................

48. ஆண் ஒருவருக்கு ஏக காலத்தில் திருமணம் முடிக்கத் தற்காலிகமாகத் தடை செய்யப்பட்ட மூவரைக் குறிப்பிடுக.

..........................................................................................
..........................................................................................

49. ஈஜாப் - கபூல் எனும் பதங்கள் சுட்டும் கருத்துக்கள் யாவை?

..........................................................................................
..........................................................................................

50. குடும்ப உறவின் மூலம் உருவாகும் மஹ்ரமீக்கள் பற்றி குறிப்பிடுக.

..........................................................................................
..........................................................................................
..........................................................................................

51. ஆண்களுக்கு மணம் முடிக்க ஹராமான மூன்று உறவினர்களைப் பெயரிடுக.

..........................................................................................
..........................................................................................

52. விவாக விலக்கின் வகைகள் மூன்றைக் குறிப்பிடுக.

..........................................................................................
..........................................................................................

53. தலாக் ரஜஈ - தலாக் பாஇன் எனும் பதங்கள் சுட்டும் கருத்துக்கள் யாவை?

……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………

54. திருமணத்தின் பர்ளுகள் இரண்டைக் குறிப்பிடுக.

……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………

55. மஹர் என்றால் என்ன?

……………………………………………………………………………

56. மனைவி கணவனுக்குச் செய்ய வேண்டிய கடமைகள் நான்கு தருக.

……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………

57. கணவன் மனைவிக்குச் செய்ய வேண்டிய கடமைகள் நான்கு தருக

……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………

58. பைனூனா ஸுஃரா என்றால் என்ன?

……………………………………………………………………………

59. பைனூனா குப்ராவின் பின்னர் சேர்ந்து வாழ்வதற்கான இஸ்லாத்தின் வழிகாட்டலை விளக்குக.

……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………
……………………………………………………………………………

# விடைகள்:

1. கோட்பாடு ரீதியான (நம்பிக்கை சார்ந்த) அடிப்படைகள், நடைமுறை சார்ந்த அடிப்படைகள்
2. ஒரு பொருளை அதன் கொள்விலையுடன் சந்தை நிலைக்கேட்ப இலாபமும் சேர்த்து விற்பனை செய்தல்
3. வாங்குவோன் - விற்போன், வியாபாரப் பொருள், ஈஜாப் - கபூல்
4. தெய்வீகத் தன்மை,
   பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சீர் செய்தல்,
   சமூக நலனுக்கும் தனிநபர் நலனுக்கும் இணக்கம் காணுதல்,
   நெகிழ்வுத் தன்மை
5. விற்பவருக்குச் சொந்தமானதாக இருத்தல்,
   ஒப்படைக்கும் தகுதி பெற்றிருத்தல்,
   கையிருப்பில் காணப்படல்,
   சுத்தமானதாகவும் பயனுள்ளதாகவும் இருத்தல்
6. இத்ரீஸ் (அலை) – தையல்
   தாவூத் (அலை) - இரும்புருக்கு
   ஸக்கரியா (அலை) – தச்சுத் தொழில்
   முஹம்மத் (ஸல்) – மந்தை மேய்ப்பு, வியாபாரம்
7. ஹாபில்: பயிர்ச்செய்கை
   காபில்: கால்நடை வளர்ப்பு
8. அந்நிலத்தை வளப்படுத்தியவருக்கு அந்நிலம் சொந்தமாகும்
9. முகத்தில் சதையில்லாத நிலையில் எழுப்பப்படுவார்.
10. மந்தை மேய்த்தல்
11. ‘‘எது இல்லாமல் ஒரு கடமை பூர்த்தியாகாதோ அதனை நிறைவேற்றுவதும் கடமையாகும்’’ என்ற சட்டவிதிக்கமைய ஸக்காத், ஹஜ் போன்ற கடமைகள் செல்வத்துடன் தொடர்பானவை. எனவே அக்கடமையை நிறைவேற்றுவதற்காக செல்வத்தைத் தேடுவதும் கடமையாகும்.
12. நாம் ஒரு செயலில் முழு மூச்சுடன் ஈடுபட்டுவிட்டு இறுதி விளைவை அல்லாஹ்விடம் பொறுப்புச் சாட்டுவதே உண்மையான தவக்குல்
13. முழாரபா என்பது ஒருவரது மூலதனத்தை இன்னொருவர் பயன்படுத்தி தொழில் முயற்சியில் ஈடுபட்டு இலாபத்தை இறுதியில் இருவரும் பகிர்ந்து கொள்ளும் தொழில் முயற்சி
    முஷாரகா என்பது ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் இணைந்து மூலதனத்திலும் உழைப்பிலும் எல்லோரும் பங்கேற்று இலாபத்தை அவரவர் பங்கிற்கேற்ப பகிர்ந்து கொள்ளும் தொழில் முயற்சியாகும்.
14. 1. வியாபாரத்தை அல்லாஹ் ஹலாலாக்கியுள்ளான். வட்டியை ஹராமாக்கியுள்ளான்
    2. வியாபாரம் ஒரு பொருளை விற்பனை செய்வதன் மூலம் இலாபத்தைப் பெற்றுத் தருகிறது. வட்டி பணத்திற்குப் பணம் என்ற அடிப்படையில் இலாபம் தருகிறது

3. வியாபாரத்தில் இரு தரப்பினர்க்கிடையில் புரிந்துணர்வு ஏற்படுகிறது. ஆனால் வட்டியில் அவ்வாறு இரு தரப்பினர்க்கிடையில் புரிந்துணர்வு ஏற்படுவதில்லை.

4. வியாபாரத்தில் இலாபம், நஷ்டம் இரண்டுக்கும் இடம்பாடுண்டு. ஆனால் வட்டியில் இலாபம் மட்டுமே எதிர்பார்க்கப்படுகிறது

15. தூய எண்ணம், அடிப்படை வணக்க வழிபாடுகளுக்கு தடையில்லாது இருத்தல், ஷரீஆவின் அனுமதி, ஷரீஅத்தின் வரையறைகளை மீறாதிருத்தல், நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் செய்தல்
16. பிரிந்து காணப்படும் வளங்களும் ஆற்றல்களும் ஒன்று சேர்கின்றன, சமூகத்தேவைகள் நிறைவேறகின்றன
17. சோம்பல், தவக்குல் பற்றிய பிழையான அபிப்பிராயம், பற்றின்மை
18. 'உரிமை கோரப்படாத ஒரு நிலத்தை ஒருவர் பயன்படுத்தி வளமாக்கினால் அவரே அதற்குத் தகுதியானவர்' (புஹாரி)

    "யார் ஒரு மரத்தை நட்டி அது காய்க்கும் வரை பொறுமையுடன் அதை பராமரிக்கின்றாரோ அவருக்கு,அம் மரத்தின் மூலம் யார் பயனடைந்தாலும் அது அல்லாஹ்விடம் தர்மமாகவே ஏற்றுக்கொள்ளப்படும் (அஹ்மத்)
19. தேவையில்லாத சத்தியம், அளவை நிறுவை மோசடி, பதுக்கல், கலப்படம், ஏமாற்றுதல்
20. 1 கொடுக்கல் வாங்கல் நடவடிக்கை வணக்கமாக மாறும்

    2 இருவருக்கிடையிலும் நல்லுறவு பேணப்படும்

    3 வியாபாரம் ஸ்தீரத் தன்மை அடையும்

    4 ஹராமான கொடுக்கல் வாங்கல்களில் இருந்து மீட்சி கிடைக்கும்
21. கர்ழ்: பரோபகாரக் கடன், ஸலம்: முற்பணக் கொடுப்பனவு வியாபாரம்
22. நம்பிக்கையும் நாணயமும்
23. 'தனது இரு கரங்களினால் உழைத்துச் சாப்பிடுவதைவிட சிறந்த உணவை ஒருவர் சாப்பிட முடியாது. நிச்சயமாக அல்லாஹ்வின் தூதர் தாவூத் (அலை) தனது கரத்தால் உழைத்தே சாப்பிட்டார்கள்' (புஹாரி).
24. உஸ்மான் (ரழி), அப்துர்ரஹ்மான் பின் அவ்ப் (ரழி), அபூபக்கர் (ரழி)
25. மதீனா வாசிகள் பேரீத்தம்பழ உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்றகாக செயற்கை முறையிலான மகரந்த சேர்க்கை முறையை பயன்படுத்தினார்கள்.அச்செயலை நபியவர்கள் அனுமதித்தார்கள்.
26. நூஹ் (அலை),ஸகரிய்யா (அலை) அவர்கள்
27. மன்னன் ஸுல்கர்னைன்
28. 'கைத்தொழிலும் பொய் கலவாத வர்த்தகமும்' என்றார்கள்
29. ஸைனப் பின்த் ஜஹஷ் (ரழி)
30. வியாபாரம் செய்பவர்களிடம் அதுபற்றிய சட்ட விளக்கம் இருக்க வேண்டும் என்று உமர் (ரழி) அவர்கள் வழியுறுத்தக் காரணம் பிழையான வழிகளில் சம்பாதிக்காதிருப்பதற்காக
31. தேவையில்லாத சத்தியம், அளவை நிறுவை மோசடி, பதுக்கல், கலப்படம், ஏமாற்றுதல், பொதுச் சட்டங்களை மீறல்
32. உரிமை: வழங்கிய சேவைக்கு உரிய ஊதியத்தைப் பெறுதல்

    கடமை: தனது ஊதியத்திற்கு ஏற்ற சேவையை வழங்குதல்

33. ‘அதிகம் சத்தியம் செய்வதனாலும், பேச்சில் பொய் சொல்வதாலும்’ நபியவர்கள் வியாபாரிகளை பாவிகள் என்றார்கள்
34. நேர்மையாக நடத்தல், ஹராம் ஹலால் பேணல், பொதுச்சட்டங்களை மதித்தல், மார்க்க வரையறைகளைப் பேணல்
35. பெற்றோர் மீது அன்பு வைத்தல், அவர்களுக்குக் கட்டுப்படல், அவர்களுக்காகப் பிரார்த்தித்தல், அவர்களின் தேவைகளை நிறைவேற்றுதல்
36. நிம்மதி, சந்தோசம், அமைதி என்பவற்றைக் கொண்டிருத்தல்
    சுவனத்தை இலக்காகக் கொண்டிருத்தல்
    ஒவ்வொருவரும் தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் செயற்படுத்தல்
    அயல் உறவுகளைப் பேணி நடத்தல்
    குடும்ப அங்கத்தவர்கள் தமது குடும்பத்துக்கு எந்தவிதமான அவப்பெயரும் வராமல் பாதுகாத்துக் கொள்வார்கள்.
    இரத்த பந்தங்களைப் பேணி நடத்தல்

37. மார்க்க கடமைகளைக் கற்றுக் கொடுத்தல்
    உணவு, உடை, உறையுள் வழங்குதல்
    ஒழுக்கம் பேணி வாழக் கற்றுக் கொடுத்தல்
    பிள்ளைகளுக்கு நல்ல பெயர் சூட்டுதல்.
    அன்பு காட்டுதல்
38. மனைவியின் சகோதரி, மனைவியின் தாயின் சகோதரி, மனைவியின் தந்தையின் சகோதரி, இத்தாவில் உள்ள பெண், இஹ்ராம் தரித்த பெண், விபச்சாரி, முஷ்ரிக்கான பெண், இன்னொருவரின் மனைவி

39. பெண் சுத்தமாக இருக்கும் காலத்தில் சொல்லல், அக்காலத்தில் உடலுறவு கொள்ளாத நிலையில் சொல்லல், அடுத்த சுத்தமான காலத்தில் இரண்டாம் தலாக் சொல்லல், அதற்கடுத்த சுத்தமான காலத்தில் மூன்றாம் தலாக் சொல்லல்
40. அலங்காரங்கள் ஒப்பனைகளைத் தவிர்த்தல் (இஹ்தாத்), திருமணப் பேச்சுவார்த்தையில் ஈடுபடாதிருத்தல்
41. திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாத கிட்டிய உறவு மஹ்ரம் எனப்படும்.
42. மனைவியின் தாய், மனைவியின் புதல்வி, மகனின் மனைவி, தந்தையின் மனைவி
43. பார்வையைத் தாழ்த்துதல், அவ்ரத்தை முழுமையாக மறைக்கக் கூடிய வகையிலும், மரியாதையான அமைப்பிலும் ஆடை அணிதல், நடை, உடை, பாவனை, பேச்சு போன்ற அனைத்திலும் இஸ்லாமிய ஒழுக்கங்களைப் பேணிக் கொள்ளல், தவறான உணர்வுகளைத் தூண்டக் கூடிய அனைத்துவிதமான

காரியங்களிலிருந்தும் விலகியிருத்தல், சமூக நல விடயங்களில் இஸ்லாமிய வரையறைகளைப் பேணி நடந்து கொள்ளல், ஆண், பெண் தனித்திருத்தலுக்கான சந்தர்ப்பத்தைத் தவிர்த்தல்.

44. “ஆணும் பெண்ணும் கணவன் மனைவி என்ற அந்தஸ்தை மார்க்க ரீதியாகவும் சட்ட ரீதியாகவும், சமூக ரீதியாகவும் அடைந்து கொள்வதற்காக இறையச்ச உணர்வோடு செய்து கொள்கின்ற ஓர் உடன்படிக்கையே நிகாஹ் ஆகும்.”

45. ஸாலிஹான சந்ததி உருவாக்கல்
    உடல் உள அமைதியை ஏற்படுத்துதல்
    ஒழுக்கம் பேணல்
    சிறந்த சமூகக் கட்டமைப்பைத் தோற்றுவித்தல்
    பாவங்களிலிருந்து பாதுகாப்புப் பெறல்

46. “எங்கள் இறைவனே! எங்கள் மனைவியர் மூலமும் எங்கள் சந்ததிகள் மூலமும் கண்குளிர்ச்சியை எமக்கு வழங்குவாயாக!” (25:74)

    “கணவன் தன் மீது திருப்தி கொண்ட நிலையில் மரணமடையும் பெண் சுவனம் நுழைவாள்” (இப்னு மாஜா)

47. மனைவியைத் தன் தாய்க்கு ஒப்பிட்டுக் கூறல்

48. மனைவியின் உடபிறந்த சகோதரிகள், மனைவியின் தந்தையின் சகோதரிகள், மனைவியின் தாயின் சகோதரிகள்

49. மணப்பெண்ணை மணமகனிடம் கையளிப்பதைத் தெரிவிக்குமுகமாக மணமகளின் பொறுப்பாளரான (வலி) கூறும் வாசகம் ஈஜாப் (ஒப்படைத்தல்)எனப்படும். வலி மூலம் ஒப்படைக்கப்பட்ட மணப்பெண்ணை தான் ஏற்றுக்கொண்டதாக மணமகனால் கூறப்படும் வாசகம் கபூல் (ஏற்றுக் கொள்ளல்) எனப்படும்.

50. தாய், தாயின் தாய், புதல்வி, மகளின் புதல்வி, மகனின் புதல்வி, சகோதரி, தந்தைவழி-தாய்வழி சகோதரி, சகோதரனின் புதல்வி, தாய் வழி தந்தைவழி சகோதரனின் புதல்வி, சகோதரியின் புதல்வி, தந்தைவழி – தாய்வழி சகோதரியின் புதல்வி

51. தாய், தாயின் தாய், புதல்வி, மகளின் புதல்வி, மகனின் புதல்வி, சகோதரி, தந்தைவழி-தாய்வழி சகோதரி, தலாக், குல்உ, பஸ்கு

52. தலாக் ரஜஈ என்பது நிரந்தரப் பிரிவினையை ஏற்படுத்தாத மீள இணைந்து வாழ வாய்ப்புள்ள தலாக் ஆகும். தலாக் பாஇன் என்பது மீள முடியாத தலாக் ஆகும். மூன்று தலாக்கும் சொல்லப்பட்ட நிலையை இது குறிக்கும்.

53. ஈஜாப் - கபூல்
    ஷாஹித்கள் (இரு சாட்சிகள்)
    மணமகன்-மணமகள்

54. திருமணத்தின் போது மணமகனால் மணமகளுக்காகக் கொடுக்கப்படும் கட்டாய அன்பளிப்பு

55. கணவனின் தலைமைத்துவத்துக்குக் கட்டுப்படல்
கணவனின் உடைமைகளைப் பாதுகாத்தல்
கணவனின் இரகசியங்களைப் பாதுகாத்தல்
தன் கற்பைப் பாதுகாத்தல்
கணவனின் சுக துக்கங்களில் மனம் கோணாது நடந்துகொள்ளல்.
56. உணவு,உடை,உறையுள் வழங்குதல்
மனைவிக்குப் பாதுகாப்பு வழங்குதல்
அவளது கௌரவம், மானம் என்பன மதிக்கப்படுதல்
அவளது ஹலாலான தேவைகளைப் பூர்த்தி செய்தல்
தீனுடைய செயற்பாடுகளில் அவளுக்கு ஒத்தாசையாக செயற்படல்
57. சிறிய பிரிவினை,
அதாவது, முறையான தலாக்கின் போது மூன்றாவது தலாக் சொல்லப்படாத நிலையில் இத்தாக் காலம் பூர்த்தியாகிவிடுமானால், புதியதோர் நிகாஹ் ஒப்பந்தத்தின் மூலம் தம்பதிகள் மீண்டும் இணைந்து வாழ அனுமதியுண்டு என்பதைக் குறிக்கின்றது.
58. மூன்று தலாக்கும் முடிவுற்றால் பிரிவினை மிகத் தெளிவாகி விடுவதையே பைனூனா குப்ரா என்பது குறிக்கின்றது.
இச்சந்தர்ப்பத்தில் இருவரும் மீண்டும் சேர்ந்து வாழ விரும்பினால், அவளை வேறு ஒருவர் மணமுடித்து, அவன் மூன்று தலாக்குகளையும் சொல்லி, அதற்கான இத்தாவையும் அவன் அனுஷ்டித்து, அதிலிருந்து நீங்கிய பின்னர், முன்னைய கணவனுடன் மற்றொரு புதிய நிகாஹின் அடிப்படையில் இணையலாம் என இஸ்லாம் குறிப்பிடுகின்றது.